වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

Annual Report

2016

ජාතික ව්‍යවසාය සංවර්ධන අධිකාරිය

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

National Enterprise Development Authority

කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍යාංශය

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு

Ministry of Industry and Commerce

N E D A

அறிமுகம்

சிறுதொழில் மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (எஸ்.எம்.இ) இலங்கைக்கு வசதியாக இந்த அமைப்பின் ஆணை 2006 ஆம் ஆண்டின் 17 ஆம் ஆண்டின் கீழ் நிறுவப்பட்ட தேசிய நிறுவன மேம்பாட்டு ஆணையம் (நெடா). உள்ளூர் நிறுவனங்களுக்கு உள்கட்டமைப்பு, நிதி மற்றும் கொள்கை அளவிலான ஆதரவை வழங்குவதன் மூலம் SMES ஐ அதிகாரம் செய்வதற்கான அதிகாரச் சட்டம் சட்டமியற்றுகிறது

வரி அமைச்சின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதலுடன் பிராந்திய மற்றும் தேசிய மட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரம், 2006 முதல் 2010 வரை முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் நிறுவன மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் NEDA பட்டியலிடப்பட்டது. தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் பட்டியலிடப்பட்ட NEDA & 2010 ஆம் ஆண்டில் வர்த்தகம் மற்றும் இது தொழில்துறை மற்றும் வர்த்தக அமைச்சகத்திலிருந்து இன்றுவரை நிர்வகிக்கப்படுகிறது

பொது மற்றும் தனியார் வங்கிகள், வணிக அறைகள் அரசு சாரா நிறுவனங்கள் (உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் போன்ற பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடனான SME சமூக தொடர்புகளுக்காக பிரதேச செயலக மட்டத்திலிருந்து பல்வேறு திட்டங்கள், திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை NEDA துவக்கியது. இந்த திட்டங்களின் நோக்கங்கள் நிதி உதவி, அடிமட்ட அளவிலான SME க்களுக்கான பயிற்சி ஆலோசனை ஆதரவு போன்ற அடிப்படை தேவைகள். DS பிரிவு மட்டத்தில் SME களை ஒருங்கிணைக்க பிரதேச செயலகம் (DS) மட்டத்தில் பிராந்திய அளவிலான அதிகாரிகள் இருந்தனர்.



தொலைநோக்கு

“நாட்டின் பொருளாதார அரசியல் மற்றும் சமூக தேவைக்குப் பங்களிப்புச் செய்யும்வகையில் சக்திவாய்ந்ததும், நிலைபேறானதுமான ஒரு போட்டித்தொழில் முயற்சித் துறையினரை உருவாக்குதல்.”

பணிக்கூற்று

“இலங்கையின் தேசிய பொருளாதாரத்தினை பூரணமாக்குவதற்குத் தேவையான தே.தொ.அ.அ.இனது (நேனுயு) தொழில் முயற்சியாண்மைகளின் அபிவிருத்தி, வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மைகளினை வசதிப்படுத்துவதும், தூண்டுதலுக்குமான ஒத்தாசையை வழங்கல்.”

நோக்கங்கள்

இலங்கைக்குள் சிறிய, நடுத்தர (ளுஆநு) அபிவிருத்திகளை ஊக்குவித்தல், தரமுயர்த்துதல் மற்றும் வசதிப்படுத்துவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சி, விரிவாக்கல் மற்றும் அபிவிருத்திக்கு ஊக்கமளித்தல்.

தே.தொ.அ.அ.இன் (நுேனுயு) சட்டத்தின் நோக்கங்களை அடையுமுகமாக உள்நாட்டுத் தொழில் முயற்சிகளினைச் சர்வதேசத்திற்கும், வெளிநாட்டுச் சந்தைக்கும் ஏற்றவிதமாக உட்புகுத்தும் நோக்கத்துடன் தொழில்முயற்சி வடிவமைப்பினை இலங்கைக்கு வெளியே தாபிப்பதையும், தொழிற்படுத்துவதனையும் ஊக்கமளித்துத் தூண்டுதல்.

கைத்தொழில் மற்றும் விவசாயத்திலான வியாபாரத்தினையும், அபிவிருத்தியினையும் கருத்தில்கொண்டு கொள்கை, திட்டம், உயர்வான ஊக்குவிப்பினை பொருத்தமான முறையில் வடிவமைப்பதுடன் வினைத்திறமையான ஒத்துழைப்பினையும், ஊக்குவிப்பினையும் வழங்கல்

தொழில்நுட்பத்திறனுடன்கூடிய மனித மூலதன அபிவிருத்தியில் மக்களின் அதிகாரமளித்தலை தொழில்முயற்சி அபிவிருத்தியினது ஒரு அவசியமான அங்கமாக்குதல்.

அபிவிருத்தித் தேவைகளைச் சந்திப்பதற்கு வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்தல்.

தொழில்முயற்சி, அபிவிருத்தி மற்றும் தொழிற்பாட்டிற்குத் தேவையான நிதிவசதியினை தொழில்முயற்சியாளர்களின் மூலமாகப்பெற ஏற்பாடுசெய்தல்.

உற்பத்தி, அபிவிருத்தி, தொழில்நுட்பவியல் தரமுயர்த்தல் மற்றும் வியாபாரக்குறி வர்த்தகமயமாக்கலுடன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை உயர்ந்த நிலைக்கு மாற்றுவதற்கு ஒரு தொழில்நுட்பவியல் அபிவிருத்தி நிதியினைத் தாபித்தல்.

பிராந்தியப் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுதல்.

· பணிப்பாளர் சபை

- திரு. ஓமர் காமில் - தலைவர் ∴ பணிப்பாளர் நாயகம்
- திரு. அன்வர் முஸ்தாபா - பணிப்பாளர் சபை உறுப்பினர்
- திரு. சஞ்சீவ டிக்வெல்ல - பணிப்பாளர் சபை உறுப்பினர்
- திரு. எம்.எஸ்.எம். நதீர் - பணிப்பாளர் சபை உறுப்பினர்
- எச்.ஏ.ரீ. எரண்டி அவர்கள் - உதவிப் பணிப்பாளர் நிதி திட்டமிடல் அமைச்சு,

  பணிப்பாளர் சபை உறுப்பினர்

- திரு. அனுர பண்டார் அமைச்சு, - பணிப்பாளர் திட்டமிடல் கைத்தொழில் வாணிப

  பணிப்பாளர் சபை உறுப்பினர்

- திரு. எஸ். ஆனந்தராசா - பணிப்பாளர் சபை உறுப்பினர்.

30.11.2021

கௌரவ.விமல் வீரவன்ச
கைத்தொழில் அமைச்சர் (பா.உ)
கைத்தொழில் அமைச்சு
இல.73/1,
காலி வீதி
கொழும்பு 03.

கௌரவ ஐயா,

<u>வருடாந்த அறிக்கை 2016</u>

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)ஆம் பிரிவின்படி, 2016ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையுடன் சம்பந்தமாக பின்வரும் ஆவணங்களினை நான் சமர்ப்பிக்கின்றேன்.

01) தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2016ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு அறிக்கை.

02) 31 டிசம்பர் 2016 அன்றுள்ளபடியான ஐந்தொகை, 31 டிசம்பர் 2016இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான, செலவுக்கூற்று மற்றும் 31 டிசம்பர் 2016இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்வுக் கூற்று.

03) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

தங்கள் உண்மையுள்ள,

சுனில் ஜெயரத்ன
தலைவர் / பணிப்பாளர் நாயகம்

உள்ளடக்க அட்டவணை

1.0 தகவல் பரிமாற்றம். 7

1.1 செய்திக்கடிதம் மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாண்மை (ளுஆநு) வழிகாட்டல் புத்தகத்தினைத் தயாரித்தல். 7

1.2 நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் (ஆளுஆநுள) அடிப்படைத் தரவினைத் தயாரித்தல். 7

1.3 'வயவசயகஉதானய' – (ஏலயஎயளயலயமநருனயயெலய) ரூபவாஹினி நிகழ்ச்சித்திட்டம். ... 8

2.0 வியாபார ஒத்துழைப்புச்சேவை வலைப்பின்னல் - வியாபார அபிவிருத்திச் சேவை (டீனுளு) ஏற்பாட்டாளர்களுக்கான பதிவுசெய்தல் மற்றும் உத்தரவுப்பத்திரம் வழங்கல். 8

3.0 பிராந்திய தொழில்முயற்சியாளர்கள் விருது வழங்கும் விழாக்கள். 10

4.0 மாவட்டம் மற்றும் பிராந்திய தொழில் முயற்சிகள் குழுக்கள். 11

5.0 பிரச்சினைகளைக் கையாளல்: 12

6.0 தேசிய மற்றும் பிராந்திய கைத்தொழில் சந்தை: 12

7.0 சந்தை தொடர்பு நிகழ்சித்திட்டம்: 13

8.0 பரீட்சித்துப்பார்த்தல் மற்றும் தொழில்நுட்பவியல் பரிமாற்று நிலையத்தினைத் தாபித்தல் - (ஐவுவுஊ) – மாகதுற 14

9.0 நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்காக (ஆளுஆநுள) சான்றிதழ் பயிற்சிநெறியினையும் வேலைப்பட்டறையினையும் நடாத்துதல். 15

10.0 பிராந்திய தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம். 15

11.0 பெண்கள் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம். 18

12.0 இருபாலாலாரிலுமான தொழில்முயற்சியாளர்கள் 'உபாதிதாரி வயவசயக உதானய' (ருியனாானையசஷைலயஎயளயலயமநருனயயெலய) 20

13.**நிதி அறிக்கைகள்** 22

13.1 **விரிவான வருமான அறிக்கை** 22

13.2 **நிதி நிலை அறிக்கை** ..... **Error! Bookmark not defined.**

13.3 **ஈக்விட்டியில் ஏற்படும் மாற்றங்களின் அறிக்கை** 25

14.0 **ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை** 26

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2016

1.0 தகவல் பரிமாற்றம்.

1.1 செய்திக்கடிதம் மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாண்மை (ளுஆநு) வழிகாட்டல் புத்தகத்தினைத் தயாரித்தல்.

தே.தொ.அ.அ.வானது (நேனுயு)இ சிறிய நடுத்தர முயற்சியாளர்களுக்கானதும் **(ளுஆநுள)** அதே போன்று வியாபார அபிவிருத்தி சேவை வழங்குநர்களுக்குமான **(டீனுளு)** வழிகாட்டல் புத்தகத்தினது மென் பிரதியினை (இயந்திர உற்பத்தியாளர்களின் விபரம்) பூர்த்திசெய்துள்ளது. இது இயந்திர வழங்குநர்களின் மீதான தகவல்களை உள்ளடக்குவதுடன் இது தொழில்முயற்சியாளர்கள், வெற்றிகரமான தொழில்முயற்சியினைத் தாபிப்பதற்கு வழிகாட்டும் மிகப் பயனுள்ள ஆவணமாக விளங்கும். (200 பக்கங்கள் அளவில்.) தே.தொ.அ.அ.வானது (நேனுயு)இ இதனை 2017ஆம் ஆண்டில் வெளியிடத் திட்டமிட்டது.

தே.தொ.அ.அ.வானது (நேனுயு)இ தொழில்முயற்சியாளர்களுக்கான மற்றும் வியாபார அபிவிருத்திச்சேவை ஏற்பாட்டாளர்களுக்கான **(டீனுளு)** செய்திக் கடிதங்களை, காலாண்டில் பிரசுரம் செயகின்றது. தே.தொ.அ.அ.வானது (நேனுயு)இ 2016ஆம் ஆண்டிற்கான ஒரு செய்திக்கடிதத்தினைப் பிரசுரித்தது. இதற்கும் மேலாக, தே.தொ.அ.அ.வானது (நேனுயு)இ ளஅந.டம மற்றும் லந.டம என்ற இணையத்தளத்தினையும் பாராமரிக்கின்றது. இது நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்குப் (ஆளுஆநு) பயனுள்ளதாகும்.

1.2 நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் (ஆளுஆநுள) அடிப்படைத் தரவினைத் தயாரித்தல்.

தே.தொ.அ.அ.வானது (நேனுயு)இ நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் அடிப்படைத் தரவினை பிரதேச செயலாளர் மட்டத்தில் பராமரித்துவருவதுடன், இது ஆண்டுதோறும் இற்றைவரைப்படுத்தப்படுகின்றது. இது பிராந்தியப் பகுதிகளில் தொழிற்படும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் (ளுஆநு) விபரங்களை உள்ளடக்கியுள்ளது.

1.3 ‘வயவசயகஉதானய’ – (ஏலயஎயளயலயமநருனயயெலய) ரூபவாஹினி நிகழ்ச்சித்திட்டம்.

தே.தொ.அ.அ.வானது (நுேனுயு)இ சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களினை ஊக்குவிக்கப் பல்வேறு நடவடிக்கைகளைப் பொறுப்பேற்றதுடன் இலத்திரனியல் ஊடகமூலம் (ரூபவாஹினி ஒளிபரப்புச் சேவை) தொழில் முயற்சியாளர் கல்வி நிகழ்சியினை நடாத்துகின்றது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாவன:

1. தொழில் முயற்சியாளர்களுக்கும் வியாபார அபிவிருத்தி சேவை ஏற்பாட்டாளர்களுக்கும், வியாபாரத் தகவல்களை ஏற்பாடுசெய்தல்.

2. தொழில் முயற்சியாளர்களுக்கும், வியாபார அபிவிருத்திச் சேவை ஏற்பாட்டாளர்களுக்குமிடையிலான இடைவெளியினைக் குறைத்தல்.
3. தொழில் முயற்சியாளர்களுக்கிடையில் மனோபாவரீதியான மற்றும் தொழில் முயற்சியாளர் கலாச்சாரத்தை அபிவிருத்திசெய்தல்.
4. தொழில்நுட்பவியல் பரிமாற்றம் செய்தல்.
5. வியாபார அபிவிருத்தி சேவை ஏற்பாட்டாளர்களுக்கான சேவைகளினை உயர்த்துதல்.
6. வெவ்வேறு களரீதியான வியாபார அறிவினை முன்னேற்றுதல்.
7. தொழில் முயற்சியாளர்களினால் முகம்கொடுக்கப்படும் வியாபாரப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள். (தங்களின் வியாபாரப் பிரச்சினைகளை முன்வைக்க, இயலுமையுடைய தொழில்முயற்சியாளர்கள்.)

வியாபாரத் தகவல்களும், வியாபார அறிவும், தொழில் முயற்சியாளர்களுக்கு இலத்திரனியல் ஊடாக மூலம் விரைவாகவும், வினைத்திறமையுடனும் சென்றடையக்கூடியன. குழுக் கலந்துரையாடல் மூலம் விவாதவிடயக் கற்கைகள், கள அவதானிப்புக்கள் மற்றும் விளம்பரங்களினை வழக்குவதற்கு நிகழ்ச்சித்திட்டமானது ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. ஒளிபரப்பு நிகழ்சியானது, கிழமைதோறும் ரூபவாஹினி மூலம் நடாத்தப்படுகின்றது. தே.தொ.அ.அ.வானது 2016ஆம் ஆண்டில் 39 நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது.

2.0 வியாபார ஒத்துழைப்புச்சேவை வலைப்பின்னல் - வியாபார அபிவிருத்திச் சேவை (டீனுளு) ஏற்பாட்டாளர்களுக்கான பதிவுசெய்தல் மற்றும் உத்தரவுப்பத்திரம் வழங்கல்.

நுண், சிறிய, நடுத்தர வியாபாரச் சமூகம் (ஆளுஆளு) உட்பட, தொழில்முயற்சியாளர்கள், வேலைவாய்ப்பற்றோருக்கு மற்றும் மாத்திரமல்லாமல் உள்ளூர் சமூகங்களுக்கும், உயர்தரம் வாய்ந்த வாடிக்கையாளர்கள் இட்டுச்செல்லும் ஆலோசனை, வழிகாட்டல், ஒத்துழைப்பு மற்றும் பயிற்சியளித்தல்களை ஏற்பாடு செய்வதற்காக வியாபார அபிவிருத்திச் சேவைகள் (டீனுளு) கருமமாற்ற வேண்டும். இந்தச் சேவைகளானவை, வியாபார அபிவிருத்திச் சேவைகளினை (டீனுளு) வழங்குகின்ற தனியாள் ஆலோசகர் மற்றும் நிறுவனங்களினால் வழங்கப்படுகின்றன.

வியாபாரத்தைத் தொடங்குதல், விரிவாக்கல், ஏற்றுமதி செய்தல், நிதியளித்தல், கல்விப்பயிற்சியளித்தல் மற்றும் எனைய வியாபார ஒத்தாசைச் சேவைகள் தொழில்முயற்சியாளர்களுக்குத் தேவையாகவுள்ளன. ஆயினும் இங்கு இந்த வகையான ஒத்துழைப்புச் சேவைகள் தொழில்முயற்சியாளர்களுக்கு ஏற்பாடுசெய்யப் பொருத்தமான பொறிமுறையோ அத்துடன் தொழில்முயற்சியாளர்களுக்கும், வியாபார அபிவிருத்திச் சேவை ஏற்பாட்டாளர்களுக்குமிடையில் ஏற்ற வலைப்பின்னல் அமைப்போ காணப்படவில்லை. இதற்கும் மேலாக, சில வியாபார அபிவிருத்திச் சேவை ஏற்பாட்டாளர்கள் தரமான சேவைகளை வழங்குவதற்கு ஏற்ற இயலுமைக் குறைபாடுகளுடன் காணப்படுகின்றனர். தே.தொ.அ.அ.வானது, அவர்களுக்குத் தங்களின் இயலுமையினை அபிவிருத்திசெய்யவும் அவர்களின் தரத்தினை முன்னேற்றவும், இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை ஏற்பாடுசெய்ய விரும்புகின்றது.

2016ஆம் ஆண்டில் தே.தொ.அ.அ.வானது, (நுேனுயு) வியாபார அபிவிருத்திச் சேவை ஏற்பாட்டாளர்களைப் (டீனுளு) பின்வருமாறு அட்டவணைப்படுத்தியது.

வியாபாரஅபிவிருத்திச்சேவை(வி.அ.சே.) ஏற்பாட்டாளர்களின் வகை	**விண்ணப்பங்களின் எண்ணிக்கை**
பயிற்சியளிப்பவர்.'.ஆலோசகர் தொழில்முயற்சியாளர்	25
பயிற்சியளிப்பவர்.'.ஆலோசகர் தொழில்நுட்பம்	64
இயந்திர உற்பத்தியாளர்கள்	110
தனியார் வங்கிகள்	17
ஓப்பீட்டளவிலானவை	50
பொது வங்கிகள்	34
அரசுசார்பற்றவை.'.அரை-அரசுசார்பானவை	39

அட்டவணை 01: பதிவுசெய்யப்பட்ட வி.அ.சே (டீனுளு) ஏற்பாட்டாளர்கள்.

3.0 பிராந்திய தொழில்முயற்சியாளர்கள் விருது வழங்கும் விழாக்கள்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பூரணமான பங்களிப்புச் செய்த இந்தவகையான தொழில்முயற்சியாளர்களினை அடையாளம் காணல் ஊக்குவித்தல் உந்துசக்தியளித்தல் போன்றவற்றைச் செய்யுமுகமாக தொழில்முயற்சியாளர்கள் விருதுவழங்கும் விழாவினை தேசிய தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி அதிகாரசபையானது நடாத்துகின்றது. மாவட்ட மன்றங்கள் அரசாங்க நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நான்கு மாவட்டங்களில் நான்கு விருது வழங்கும் விழாக்கள் நடாத்தப்பட்டன. (சப்ரகமுவ வடமத்தி மேற்கு மற்றும் மத்திய மாகாணங்கள்). மேலும் இதேபோல இரண்டு விழாக்கள் வடக்கு மற்றும் கிழக்கில் ஆயத்தம்செய்யப்பட்டபோதும் இது 2017 ஆம் ஆண்டில் பூர்த்தியாக்கப்படவிருந்தது.

இவ் விருதுவழங்கலின் நோக்கமானது:-

- பிராந்தியத்திலுள்ள் மிகத்திறமையான தொழில்முயற்சியாளர்களினை அடையாளம் காணலும் விருதுவழங்கலும்.
- மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பினைச் உயர்வாகச் செய்யக்கூடிய தொழில்முயற்சியாளர்களுக்கு உந்துசக்தியளித்தலும் உற்சாகப்படுத்தலும்.

.





படம் 01: சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்படல்.

4.0 மாவட்டம் மற்றும் பிராந்திய தொழில் முயற்சிகள் குழுக்கள்.

மாவட்டம் மற்றும் பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்களானவை, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் மட்டத்தில் தொழில் முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்திச் சேவையினை (வி.அ.சே - டீனுளூ) ஏற்பாடுசெய்யும் பொருத்தமான பொறிமுறையினை அபிவிருத்திசெய்யுமுகமாகத் தாபிக்கப்பட்டது. இது மாவட்டத்தின் அரசுசார்பான மற்றும் அரசுசார்பற்ற வி.அ.சே (டீனுளூ) ஏற்பாட்டாளர்கள் மன்றங்கள் மற்றும் வியாபாரங்கள் அல்லது வியாபாரக் கழகங்களை உள்ளடக்கும். தே.தொ.அ.அ.வானது (நேனுயு) மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் மாவட்ட தொழில்முயற்சியாளர் குழுக்கள் (னுநுகு)இ மற்றும் பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்களைத் (சுநுகு) தாபிக்கத் திட்டமிட்டுள்ளது. இந்த மாவட்ட தொழில்முயற்சியாளர் குழுக்கள் (னுநுகு) மற்றும் பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்களின் (சுநுகு) நோக்கங்களானவை:-

- பிரதேச செயலாளர் மட்டத்தில் வியாபார அபிவிருத்திச் சேவை (டீனுளூ) வழங்குநர்களுக்கிடையில் நல்ல உறவினைக் கட்டியெழுப்புதல்.
- பொது, தனியார்துறை கலந்துரையாடலினை ஏற்படுத்தல்.
- மாவட்ட மற்றும் பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்கள் (னுநுகு.்.சுநுகு) மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர் (ளுஆநு) குழுக்களுக்கிடையில் பொருத்தமான தொடர்பாடலைத் தாபித்தல்.
- மாவட்ட மற்றும் பிராந்திய குழுக்களினூடாக (னுநுகு.்.சுநுகு) தொழில்முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்திச்சேவைகளினை (டீனுளூ) ஏற்பாடுசெய்ய ஒரு முறைமையினை அபிவிருத்திசெய்தல்.
- வியாபாரப் பிரச்சினைகளை பிரதேச செயலாளர் மட்டத்திலிருந்து (னு.ளூ), தேசிய மட்ட மன்றம் வரை சேகரித்து, தீர்வுக்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
- 2016ஆம் ஆண்டுவரை தே.தொ.அ.அ.வானது (நேனுயு) 14 மாவட்ட தொழில்முயற்சியாளர் குழுக்களினையும் (னுநுகு)இ 88 பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்களினையும் (சுநுகு) தாபித்துள்ளது.





படம் 02: பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்கள்.

5.0 பிரச்சினைகளைக் கையாளல்:

பிரச்சினைகளைக் கையாளும் இந்த மென்பொருளானது, சிறிய நடுத்தர தொழில் முயற்சித் துறைகளிலுள்ள (ளுஆநு) பிரச்சினைகளைக் கையாள ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுவதுடன் அதற்கான தீர்வுகளைக் காண பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறியத்தருவதுமாகும்.

6.0 தேசிய மற்றும் பிராந்திய கைத்தொழில் சந்தை:

பிராந்திய நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர் துறையின் (ஆளுஆநு) அபிவிருத்தி நோக்கத்திற்கென இந்தக் கைத்தொழில் சந்தையானது பிரேரிக்கப்பட்டுள்ளது. இந்த வியாபார அபிவிருத்திச் சந்தையினது (வி.அ.ச.) நோக்கமானது வி.அ.ச. ஏற்பாட்டாளர்களுக்கும் நுண், சிறிய, நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களுக்குமிடையிலான (நு.சி.ந.தொ) இடைவெளியில் ஒரு பாலமாக இருப்பதுடன் பிராந்தியத்திலுள்ளள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை மேம்படுத்துவதுடன் சந்தைத்தொடர்புகளைத் தாபிப்பதுமாகும்.

2016ஆம் ஆண்டில் தே.தொ.அ.அ.வானது (நுேனுயு)இ குருணாகல் மற்றும் அம்பாந்தோடடை மாவட்டங்களில் இரண்டு கைத்தொழில் சந்தைகளை நடாத்தியது. தே.தொ.அ.அ.வானது (நுேனுயு)இ கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் வழிகாட்டலின்கீழ், அம்பாறை மாவட்டத்தில் கைத்தொழில் சந்தையை நடாத்துவதற்குத் திட்டமிட்டது. ஆயினும் இது அமுலாக்கப்படவில்லை. ஆயினும் தே.தொ.அ.அ.வானது (நுேனுயு)இ அம்பாறை மாவட்டத்தில், அம்பாறை கைத்தொழில் சந்தையின்கீழ், 270 தொழில்முயற்சியாளர்களுக்கு, தொழில்முயற்சியாண்மைப் பயிற்சியளித்தலைப் பூர்த்திசெய்தது.









படம் 03: கைத்தொழில் சந்தை - குருணாகல்.

7.0 சந்தை தொடர்பு நிகழ்சித்திட்டம்:

சிறிய, நடுத்தர தொ.முயற்சியாளர்களை (ளுஆநு) வழங்குநர்களாக தகைமைபெறுவதனை இயலச்செய்வதற்கு அவர்களை 'சுப்பர் மார்க்கட்' களுக்கு ஒரு தொடர் வழங்குநர்களாக அறிமுகம்செய்ய தே.தொ.அ.அ.வானது (நுேனுயு)இ திட்டமிட்டுள்ளது. எனவே தே.தொ.அ.அ.வானது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் ஏற்ற வழங்குநர்களை அடையாளம் கண்டு அவர்களின் தரம் மற்றும் வழங்கும் இயலுமைபற்றி மதிப்பீடு செய்கின்றது. தே.தொ.அ.அ.வானது உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்த ஒத்துழைப்பு வழங்குவதுடன் நிதி உதவிகளுக்கும் ஏற்பாடு செய்கின்றது.

தே.தொ.அ.அ.வானது (நுேனுயு) குருணாகல், அனுராதபுரம், அம்பாறை மற்றும் கண்டி மாவட்டங்களில்,155 பயனாளிகளுக்கு நான்கு தொழில்நுட்பப் பயிற்சியளித்தலைப் பூர்த்திசெய்தது. அத்துடன் தே.தொ.அ.அ.வானது (நுேனுயு) குருணாகல் மாவட்டத்தில் 28 பயனாளிகளுக்கு நிதிஉதவியினை ஏற்பாடுசெய்தது.





படம் 04: பொதிசெய்தலுக்கான பயிற்சியளித்தல் – குருணாகல்.

8.0 பரீட்சித்துப்பார்த்தல் மற்றும் தொழில்நுட்பவியல் பரிமாற்று நிலையத்தினைத் தாபித்தல் - (ஐவுவுஊ) – மாகதுற.

உயர் தொழில் ரீதியான பின்னணியின் மூலம் தொடக்க மூலதனத்தைக் குறைந்தளவில் முதலீடு செய்வதன் மூலம் புதிய உற்பத்தி அல்லது சேவைகளில் ஈடுபடுதலில் ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதற்கான நிலையமாக இந்த பரீட்சித்துப்பார்த்தல் மற்றும் தொழில்நுட்பவியல் பரிமாற்று நிலையமானது காணப்படுகின்றது.

இந்த செயற்றிட்டத்தின் நோக்கமானது, பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு அவர்கள் தங்களின் திடமான சுய திடகாத்திர மட்டங்களை அடையும்வரை இந்தப் பகுதிகளில் நுண் மற்றும் சிறிய கைத்தொழில் நிலையங்களை அமைக்க வசதிசெய்து கொடுப்பதாகும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்களின் மட்டத்தில் புதிய தொழில்நுட்பமும் புதிய உற்பத்திகளும் அபிவிருத்தி செய்யப்படுவதுடன் இந்த உற்பத்திகளில் பெருமளவானவை ஆராய்ச்சி மட்டத்தின் தரநிர்ணயங்களுக்கு அமைவானவை என்பதுடன் இந்த உற்பத்திகளானவை தங்களுக்கான சந்தர்ப்பங்களை பயன்படுத்த விரும்பும் சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களுடன் (ளுஆநுள) சம்பந்தப்பட்டதாகவோ அல்லது தொழில் முயற்சியாண்மைகளுடன் சம்பந்தப்பட்டதாகவோ இல்லை.

சந்தையில் காணப்படும் அபாயத்தன்மை காரணமாக சிறிய, நடுத்தர முயற்சியாளார்கள் புதிய உற்பத்தி வரிசையில் முதலீடுசெய்யத் தயங்குகின்றனர். இந்த உற்பத்திப் பொருட்களுக்கு புதிய இயந்திரங்கள் தேவைப்படுவதுடன், தங்களின் வியாபாரத்தில் ஆரம்ப மட்டத்தில் உள்ள சிறிய, நடுத்தர முயற்சியாளர்களின் இயலுமைக்கு அப்பாற்பட்டதாக இந்த இயந்திரங்களிலான முதலீடானது காணப்படுகின்றது.

நவீன வியாபாரச் சிந்தனைகளைக் கொண்டதாக, வேண்டிய இயந்திரங்களையும், உபகரணங்களையும் கொண்ட ஆரம்பத்தினை இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் (றுருளுடு) ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளிலிருந்தும், சூழவுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்தும் இந்த பரீட்சித்துப்பார்த்தல் மற்றும் தொழில்நுட்பவியல் பரிமாற்று நிலையமானது தாபித்தலை - (ஐவுவுஊ), வசதிப்படுத்திக் கொடுத்துள்ளது. இந்தப் பகுதிகளிலுள்ள நுண், சிறிய, நடுத்தர தொழிற் முயற்றசியாளர்களுடன், பரஸ்பரம் கருமமாற்ற

இந்த வகையான ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்திற்கும் ஐவுவுஊ.ஆனது, சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மேலும், பல்கலைக்கழகத்தின் கல்வியியலாளர்களும் தங்களின் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளைப் பரீட்சித்துப் பார்க்க ஐவுவுஊ இலுள்ள வசதிகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களும் தொழில் முயற்சியாளர்களாக வர ஊக்குவிக்கப்படுகின்றனர். இதற்கும் மேலாக, ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கும், நுண், சிறிய, நடுத்தர தொழில்முற்சியாளர்களுடன் சேர்ந்த இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் கல்வியாளர்களுக்குமிடையிலான கூட்டானது, நுண், சிறிய, நடுத்தர தொழில்முற்சியாளர்களினால் முகம்கொடுக்கப்படும் பிரச்சினைகளினை அடையாளம்காண வழிவகுக்குமென்பதுடன் நுண், சிறிய, நடுத்தர தொழில்முற்சியாளர்களுடன் கூட்டாக பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அவர்களின் ஆராய்ச்சியின் பங்கினைக் காண்பிக்கக்கூடியதாக உள்ளது.

இச்சந்தர்ப்பங்களில் நுண், சிறிய, நடுத்தர தொழில்முற்சியாளர்களினால் (ஆளுஆநு) எதிர்பார்க்கப்படும் கிடைக்கக்கூடியதாகவுள்ள வசதிகள் மற்றும் சேவைகளைப் பொறுத்து, ஐவுவுஊ இன் இயக்க நடைமுறையினை விளங்கிக்கொள்ள இ.வ.ப. (றுருளுடு) உடன் சேர்ந்து, தே.தொ.அ.அ.வானது (நேனுயு) ஒரு சாத்தியத்திட்ட கற்கையினை நடாத்தியது. இந்தக் கற்கையின் பெறுபேறாக ஐவுவுஊ இல் பிரதிநிதித்துவம் செய்வதற்கென தொழில் முயற்சியாளர் பிரிவினரைக் குறிப்பிட்டு ஒரு பிரேரணையானது தயாரிக்கப்பட்டது.

ஐவுவுஊ இனது தாபிப்பு, முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாடுகளுக்கென ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையானது தே.தொ.அ.அ.இற்கும் (நேனுயு)இ இ.வ.ப (றுருளுடு) இற்குமிடையில் எட்டப்பட்டுள்ளது. ஐவுவுஊ ஆனது கம்பனிகள் பதிவாளரிடத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனியாகுமென்பதுடன், அது ஒரு முகாமைத்துவ சபையினால் நிருவகிக்கப்படும்.

2016ஆம் ஆண்டில் தே.தொ.அ.அ.வானது, 90 சதவீதமான நிருமாணிப்பு நடவடிக்கைகளினையும், இயந்திர நிறுவுதலையும் பூர்த்திசெய்தது.

9.0 நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்காக (ஆளுஆநுள) சான்றிதழ் பயிற்சிநெறியினையும் வேலைப்பட்டறையினையும் நடாத்துதல்.

தே.தொ.அ.அ.வானது (நேனுயு)இ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் ஒரு சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடங்கியுள்ளது. (35 தொழில் முயற்சியாளர்களுக்காக.)

10.0 பிராந்திய தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

சி.ந.தொ.மு.யாளர்கள் (ளுஆநுள) பிராந்திய மட்டத்தில், இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய பங்கினை வகிக்கின்றது. அவர்கள் தொழில்முயற்சியாண்மை, சந்தைப்படுத்தல், தொழில்நுட்பம் மற்றும் நிதிமுகாமைத்துவத்தில் அறிவு குறைந்தவர்கள் என்பதனை தே.தொ.அ.அ.வானது (நேனுயு)இ அடையாளம் கண்டுள்ளது. அவர்கள் தங்களின் வியாபாரத்தினைத் தொடங்குவதற்கு அல்லது விஸ்தரிப்பதற்கு பணத்தடைக்கு முகம்கொடுக்கின்றார்கள். தே.தொ.அ.அ.இனது (நேனுயு)இ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

பிராந்திய மட்டத்தில் கடமைபுரிவதுடன் இந்தத் தொழில் முயற்சியாளர்களில் யாருக்கு மேற்படி அறிவும், திறனும் தேவைப்படுகின்றது என்று அடையாளம் காண்கின்றனர்.

எனவே, தே.தொ.அ.அ.வானது (நுேனுயு)இ எல்லாமாவட்டங்களிலும், பிராந்திய மட்டத்தில் இந்தத் தொழில்முயற்சியாளர்களுக்கு குறுகியகாலப் பயிற்சியளித்தலையும் அதனைப் பின்பற்றிச்செல்லுதலையும் அமுலாக்கத் திட்டமிட்டுள்ளது.

வெளியிடுகை.

1. புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட அத்துடன் தற்போதுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு, அவர்களின் தேவையினைப் பொறுத்து பயிற்சியளித்தல், (உதாரணம்: தொழில்முயற்சியாண்மை, தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல், பதிவேடுபேணுதல் போன்றன.)

2. தொடர்ந்துசெல்லும் சேவையினையும், வியாபார ஆலோசனையினையும் வழங்குதல்.

தே.தொ.அ.அ.வானது, 2016ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 11523 தொழில்முயற்சியாளர்களுக்குப் பயிற்சியளித்தது.

மாவட்டம்	பயிற்சியளித்தல்	புயனாளிகளின்எண்ணிக்கை
அனுராதபுரம்	21	380
பொல்லநறுவை	1	52
பதுளை	23	393
களுத்துறை	7	88
அம்பாந்தோட்டை	27	839
மாத்தறை	71	1904
கேகாலை	23	537
புத்தளம்	49	1609
இரத்தினபுரி	22	465
குருணாகல்	72	1119
கொழும்பு	2	5
மாத்தளை	11	232
மொனறாகலை	7	360
அம்பாறை	13	405
மட்டக்களப்பு	7	145
யாழ்ப்பாணம்	11	355
கிளிநொச்சி	3	110
வவுனியா	3	5
திருகோணமலை	5	215
முல்லைத்தீவு	01	30
கம்பஹா	42	856
காலி	41	1392
நுவரெலியா	8	27
மொத்தம்	**469**	**11523**

அட்டவணை 02: பிராந்தியப் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம்.





படம் 05: பயிற்சியளித்தல் நிகழ்ச்சி. - குருணாகல்.

11.0 பெண்கள் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

இலங்கைப் பெண்கள், நாட்டின் வியாபாரத்துறையில் துடிப்பான பங்களிப்பினை அண்மைக்காலத்தில் எடுத்துள்ளனர். ஏப்படியாயினும் அவர்கள் வியாபாரக் களத்தித்ல ஆண்களுடன் போட்டியாக சரிசமமாக போட்டித்தன்மையுடன் காலூன்றி நிற்கின்றமை தெரிகின்றது. ஆயினும் பெண்கள் தொழில் முயற்சியாளர்கள் இந்த வரிசையில் குறைவாகவே காணப்படுகின்றனர். எப்படியாயினும் இந்த நிலைமை தற்போது மாறிக் காணப்படுவதுடன் நாட்டின் பொருளாதார விடயத்தில் இலங்கைப் பெண்கள் கணிசமானளவு பங்களிப்புச் செலுத்துவதனை நிரூபிப்பதற்கான சாட்சியங்கள் காணப்படுகின்றன. விசேடமாக இலங்கையின் வியாபாரத்துறையானது கடந்த சில தசாப்த காலத்தின்போது ஆண்களுக்கும் மேலாக கணிசமானளவு பெண்களின் முன்னேற்றத்ததைக் காட்டுகின்றது. பெருமளவான பெண்கள் தங்களின் சொந்த வியாபாரத்தினை ஆரம்பித்துள்ளதுடன் அவர்களில் பெரும்பாலானவர்கள் வெற்றி வாய்ப்பினைச் சந்திக்கக்கூடியவர்களாகவும் உள்ளனர். ஆயினும் அவர்கள் தொழில்முயற்சியாண்மை சந்தைப்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகியவற்றில் மிகவும் குறைந்த அறிவுடையவர்களாக உள்ளனர். அத்துடன் தங்களின் சொந்த வியாபாரத்தைத் தொடங்கவோ ∴ வியாபாரத்தினை விரிவாக்கவோ நிதித் தடைகளைச் சந்திக்க வேண்டியிருந்துள்ளனர்.

எனவே தே.தொ.அ.அ.வானது (நேனுயு)இ அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் எல்லா மாவட்டங்களிலும் பிராந்திய மட்டத்தில் பெண்கள் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை அமுலாக்குகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தே.தொ.அ.அ.வானது (நேனுயு)இ 10,935 பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்தியுள்ளது.

மாவட்டம்	பயிற்சியளித்தல் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை
அனுராதபுரம்	22	380
பொல்லநறுவை	1	30
பதுளை	8	146
களுத்துறை	25	189
அம்பாந்தோட்டை	22	580
மாத்தறை	52	1317
கண்டி	26	910
கேகாலை	30	665
புத்தளம்	55	1492
இரத்தினபுரி	19	645
குருணாகல்	74	960
கொழும்பு	2	30
மாத்தளை	13	580
மொனறாகலை	9	210
அம்பாறை	18	560
மட்டக்களப்பு	10	254
யாழ்ப்பாணம்	20	345
கிளிநொச்சி	4	71
வவுனியா	7	480
திருகோணமலை	2	105
முல்லைத்தீவு	2	60
கம்பஹா	3	86
காலி	41	810
நுவரெலியா	1	30
மொத்தம்	**466**	**10935**

அட்டவணை 03: பெண்கள் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திப் பயிற்சியளித்தல்.





படம் 06: தொழில்நுட்பப் பயிற்சியளித்தல் - புத்தளம்.

12.0 இருபாலாலாரிலுமான தொழில்முயற்சியாளர்கள் 'உபாதிதாரி வயவசயக உதானய' (ருியனாானையசஎைலயஎயளயலயமநருனயயெலய)

தே.தொ.அ.அ.வானது (நுேனுயு), இலங்கையில், நாட்டின் சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாண்மைப் பிரிவினரை (ளுஆநு) விசேட கவனத்தில்கொண்டு, தொழில்முயற்சி அபிவிருத்தியினை அபிவிருத்திசெய்யவென, அதற்கு மேம்படுத்தல், ஒத்துழைத்தல், ஊக்குவித்தல் ஆகியவற்றைச் செய்கின்றது. இது தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி, நிதி வசதியளித்தல், சந்தை தொடர்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தொழில் முயற்சியாளர்களுக்கான உள்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகியவற்றினைத் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குநர்களுக்கு (டீனுளு) ஏற்பாடுசெய்கின்றது.

தே.தொ.அ.அ.வானது (நுேனுயு), பட்டதாரிகளுக்கு வியாபாரத்தினை ஊக்குவிப்பதற்காக 'உபாதிதாரி வயவசயக உதானய' **(ருியனாானையசஎைலயஎயளயலயமநருனயயெலய)** என்னும் பெயரிலான வியாபாரக்களத்தில் அவர்களை இணைத்துக்கொள்ளுமுகமாக பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கான தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துகின்றது.

நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள்:

வியாபாரக் களத்தில் பட்டதாரிகள் வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்களாக வருவதற்கு அவர்களை உருவாக்குதலும், ஊக்குவித்தலும்.

முலாக்கல்:

தேசிய தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பல்கலைக்கழகம் - ப.மா.ஆ.கு (ருபுஊ).

இலக்கு வைக்கப்படுபவர்கள்:

வியாபாரக் களத்தில் அக்கறையுள்ள பல்கலைக்ககழக இறுதியாண்டு மாணவர்கள்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தினூடான வசதிகள்:

- இயலுமை அபிவிருத்திப் பயிற்சியளித்தல் (தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி வியாபார முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன)
- தொழில்நுட்பவியல் பரிமாறல் (தேவைப்பாட்டினைப் பொறுத்து.)
- சந்தைத் தொடர்பு.
- வியாபாரத்தைத் தொடங்குதல் ∴ விரிவுபடுத்தல்.
- விற்பனைக்கான காட்சிப்படுத்தலைச் சென்றுபார்வையிடுதல்.
- வியாபார ஆலோசனை வழங்குதலும், அதனைத் தொடர்ந்து செல்லுதலும்.

தே.தொ.அ.அ.வானது (நேனுயு), வயம்ப, பேராதனை மற்றும் றுஹுணு பல்கலைக் கழகங்களிலுள்ள 168 பட்டதாரிகளுக்கு தொழில்முயற்சியாளர் அபிவிருத்திப் பயிற்சியளித்தலினை நடாத்தியது.

13.நிதி அறிக்கைகள்

13.1 விரிவான வருமான அறிக்கை

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பூரணமான வருமானக்கூற்று.

	குறிப்பு	2016 ரூ.	2015 ரூ.
நிகழ்ச்சித்திட்டக் கொடைகளின் பயன்பாடு:			
ஆண்டிற்கான கொடைகளின் விபரம்	16	31,614,270	15,079,892
நிகழ்ச்சித்திட்டச் செலவினங்கள்	9	31,614,270	15,079,892
நிகழ்ச்சித்திட்டத்திலிருந்தான ஆண்டிற்கான மேன்மிகை / (குறைபாடு)		-	-
தொழிற்பாடு:			
திறைசேரியிலிருந்தான மீண்டுவரும் கொடைகள்		19,202,159	19,055,872
அரசாங்கக் கொடை திரும்பச்செலுத்தியது	14	5,631,434	5,438,072
ஏனைய வருமானம்	7	18,548,872	252,102
மொத்த வருமானம்		43,382,465	24,746,046
நிருவாகச் செலவுகள்	8	25,333,872	25,359,441
ஏனைய செயல்திட்டச் செலவினம்	9	44,000	
மொத்தச் செலவினம்		25,377,872	25,359,441
ஆண்டிற்கான தேறிய மேன்மிகை / (குறைபாடு)		18,004,593	(613,396)

13.2 நிதி நிலை அறிக்கை

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

டிசம்பர் 31ஆம் திகதி அன்றுள்ளபடியான நிதிசார் நிலைமைக் கூற்று.

	குறிப்பு	2016 ரூ.	2015 ரூ.
சொத்துக்கள்			
நடைமுறையற்ற சொத்துக்கள்			
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்	10	11,988,452	14,690,973
நடைமுறைச் சொத்துக்கள்			
பெறப்படவேண்டியவைகள்	11	-	-
வைப்புக்களும், முற்பணங்களும்	12	30,890,400	2,703,648
முற்செலுத்திய செலவினங்கள்	13	83,187	49,371
பண்டிகை முற்பணம்		10,000	11,250
காசும் காசுக்குச் சமமானவையும்		18,498,850	593,251
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		49,482,436	3,357,519
நடைமுறைச் வேலை-டீ. எக்ஸ்பிறஸ் லிமிட்.		18,387,668	-
சேமிப்புக் கணக்கு-பணிக்கொடை		521,567	-
மொத்த ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்		18,909,235	-
மொத்தச் சொத்துக்கள்		80,380,125	18,048,492
மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்			
மூலதனம்:			
திரண்ட மேன்மிகை		18,564,910	2,132,443
மொத்த மூலதனம்		18,564,910	2,132,443
நடைமுறையற்ற பொறுப்புக்கள்			
அரசாங்கக் கொடை	14	9,225,134	12,503,095
இளைப்பாறல் நன்மைக் கடப்பாடுகள்	15	521,567	415,824
மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள்		9,746,701	12,918,919
நடைமுறைப் பொறுப்புக்கள்			
நிகழ்ச்சித்திட்டக் கொடை	16	34,650,594	822,387
திரண்ட செல்மதி செலவினங்கள்	17	1,479,581	2,174,746

ஒப்பந்தங்கள் மீதான பொறுப்புக்கள்	**18**	4,326,007	-
பரீட்சார்த்த செயல்திட்டம் - அமைச்சு	**19**	11,612,332	-
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		52,068,514	2,997,133
மூலதனம் மற்றும் பொறுப்புக்களின் மொத்தம்		80,380,125	18,048,492
			-

05 - 19 ஆம் பக்கங்களிலுள்ள குறிப்புக்கள் இந்த நிதிசார் கூற்றுக்களின் பிரதான பகுதிகளிலிருந்து பெறப்பட்டவையாகும்.

அதிகாரசபையின் இந்த நிதிசார் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியொழுகு வதாக இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

ஒப்பமிட்டவர்:

கணக்காளர்.

ஒப்பமிட்டவர்:

திரு அனுஷ்கா குணசிங்க

13.3 ஈக்விட்டியில் ஏற்படும் மாற்றங்களின் அறிக்கை

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

2016 டிசம்பர் 31அன்று முடிவடைந்த ஆண்டிற்கான மூலதனத்திலான மாற்றங்களின் கூற்று.

	திரண்ட மேன்மிகை ரூ.	மொத்தம் ரூ.
2015 ஜனவரி 31 அன்றுள்ளபடியான மீதி	3,705,071	3,705,071
	-	-
ஆண்டிற்கான தேறிய குறைபாடு	(613,396)	(613,396)
2014ஆம் ஆண்டிற்கான செம்மையாக்கல்கள்	(959,232)	(959,232)
2015 டிசம்பர் 31 அன்றுள்ளபடியான மீதி	2,132,443	2,132,443
	-	-
ஆண்டிற்கான தேறிய குறைபாடு	18,004,593	18,004,593
2015ஆம் ஆண்டிற்கான செம்மையாக்கல்கள்	(1,572,126)	(1,572,126)
2016 ஜனவரி 31 அன்றுள்ளபடியான மீதி	18,564,910	18,564,910

குறிப்பு:-

நிதிசார் கொள்கைகளின் கூற்றுக்களிலான தீர்க்கப்படாத முற்பணச் செலவினங்களை, அடையாளம் கண்டு முன்னைய ஆண்டிற்கான இலாபநட்டக்கணக்கில் தாக்கல்செய்ததன் காரணமாக நிகழ்ச்சித்திட்டச் செலவு முற்பணம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

14.0 ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை

தேசிய கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் 2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிக் கட்டளைச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

தேசிய கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் 2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவுற்ற வருடத்திற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் பற்றிய கூற்று, காசு பாய்ச்சற் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிக் கட்டளைச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 20(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் இணைத்து வாசிக்கப்படும் இலங்கை சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதிக்கூற்றுக்கள் தாமதமடைவதன் காரணமாக அதிகாரசபையின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை 2019 ஜூலை 23 ஆம் திகதி மும்மொழிகளிலும் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

1.3. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐளுளுயுஐ 1000-1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒழுக்கநெறி தேவைப்பாட்டிற்கு நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வானது திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் எதிர்பார்க்கின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்குரிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுப்படுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகளில், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்கரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்வதுடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையினையும் பரப்பினையும் நிர்ணயிப்பதற்காக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிக்கட்டளைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகளின் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரமானது வழங்கப்படுகிறது.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்பட்டுள்ளது.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக் கூற்றுக்களின் ஊடாக 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் தேசிய கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரச் சபையின் நிதி நிலைமைகள் மற்றும் அத்திகதியில் முடிடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையினையும் நியாயத்தன்மையினையும் பிரதிப்பலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துக்கள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இ.க.நி 16 :- ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயன்படுத்தக்கூடிய ஆயுட்காலத்தினைக் குறைத்து எல்லா நிதி ஆண்டுகளின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்ப்பு நிலைமையொன்றில் மேலே செய்யப்பட்ட மதிப்பீடுகளினூடாக மாற்றம் ஏற்பட்டால் அம்மாற்றம் இ.க.நி 8 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டில் வித்தியாசமாக கருதி கணக்கீட்டில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2016 டிசம்பர் 31 ஆம் திகதி எழுத்தப்பட்ட இறுதி மீதி ரூ.11,988,452 ஆவதுடன் தற்பொழுது பயன்படுத்திக் கொண்டிருக்கும் பொறி உபகரணங்கள், மோட்டார் வாகனம், அலுவலக உபகரணம், தளபாடம் மற்றும் பொருத்துக்கள், நூலகத்திற்கான புத்தகங்கள், கணக்கீட்டு மென்பொருள்கள் மற்றும் கணினிகள் மற்றும் துணைக்கருவிகளின் எஞ்சிய பெறுமதியும் பயன்படுத்தக்கூடிய ஆயுட்காலமும் மீளாய்வு செய்யப்படாமலிருந்தன.

2.2.2 கணக்கீட்டுக் குறைப்பாடுகள்

(அ) மீளாய்வு ஆண்டில் ஆரம்ப மீதியினை பதிவு செய்யும் போது ரூ. 593,251 மீதியானது நிதி புத்தகத்தில் பதிவு செய்வதற்கு பதிலாக திரட்டப்பட்ட நிதி கணக்கில் வரவு வைக்கப்பட்டது. அதற்கமைய திரட்டப்பட்ட நிதிக் கணக்கு மீதி மற்றும் நிதி மீதி அப் பெறுமதியால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ). மீளாய்வு ஆண்டிறுதியில் தளபாட உபகரணத்திற்கான பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டின் கணக்கு மீதி ரூ. 3,772,538 ஆக இருந்தபோதிலும் அதன் பெறுமதி ரூ. 3,603,679 ஆகுமாறு ரூ. 168,859 ஆல் குறைக்கப்பட்டு நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வு ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 14,750 பெறுமதியான கணினியின் பொருட்டு ரூ. 3,072 பெறுமானத்தேய்விற்காக ஒதுக்கப்படாமையினால் பெறுமானத்தேய்வு ஒதுக்கக் கணக்கிலும் பெறுமானத்தேய்வு கணக்கிலும் மீதியானது ரூ.3,072 குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) வாடகைக் கட்டிடத்தில் நடாத்திச் செல்லும் அதிகார சபையின் அலுவலக வளாகத்தில் இடம்பெறும் பராமரிப்பு மற்றும் பழுபார்த்தலுக்காக 2014 ஆம் ஆண்டினதும் மீளாய்வாண்டினுள் முறையே ரூ. 1,280,282 மற்றும் ரூ. 56,250 குரிய செலவு பராமரிப்பு செலவாக கருதி கணக்குகளில் பதிவு செய்யாது இயந்திரமாக கருதி மூலதனமாக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்குரிய ரூ. 390,412 பெறுமானத்தேய்வு ஒதுக்கப்பட்டிருந்தது. அதனால் ஆண்டிறுதியில் நிலையான சொத்துக்களின் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூ. 946,120 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) காசுப் பாய்ச்சற் கூற்று தொடர்பாக கீழே குறிப்பிட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் செய்யப்பட்டன.

(ஐ) கணக்காய்வினால் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சற் கூற்றிற்கும் நிர்வாகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சற் கூற்றிற்கும் கீழே குறிப்பிட்டப்பட்டுள்ள வேறுப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

	நிர்வாகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட (ரூ) காசுப் பாய்ச்சற் கூற்றிற்கமைவாக(ரூ)	கணக்காய்வினால் தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சற் கூற்றிற்கமைவாக(ரூ)	வேறுப்பாடுகள்
செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவாகிய தேறிய நிதி	7,085,721	(27,013,373)	34,099,094
நிதி நடவடிக்கைகளின் மூலம் உருவாகிய தேறிய நிதி	31,561,019	66,181,680	34,620,661
நிதியாண்டிற்குள் நிதி மற்றும் நிதி மற்றும் நிதிசார் விடயங்களின் வேறுப்பாடுகள்	17,905,599	18,427,166	521,567

(ஐஐ) காசுப் பாய்ச்சற் கூற்றினை தயாரிக்கும் போது நிதியாண்டின் தேறிய மிகைக்கு கடந்த நிதியாண்டிற்குரிய சீர் செய்யப்பட்ட ரூ. 1,572,126 மற்றும் பெறுமானத்தேய்வு மிகை ஒதுக்கம் ரூ. 575,440 என்பன பொருத்தமின்றி காணப்பட்டன.

(ஐஐஐ) மீளாய்வாண்டில் ஒப்பந்தங்களுக்கான பொறுப்பு அதிகரிப்பு ரூ. 4,326,007 ஆவதுடன் காசுப் பாய்ச்சற் கூற்றில் அப் பெறுமதி ரூ. 15,938,339 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐஏ) மீளாய்வாண்டில் ஐஎடியவழச ிசழதநஉவ தொடர்பில் கிடைக்கப்பெற்ற மானியத்தில் காலகழிவு ரூ. 18,387,668 மிகைக்கு சீர் செய்யப்படாதிருந்தது.

(ஏ) நிகழ்ச்சித்திட்டங்களுக்காக நிதிப் பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் நிதி நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டும் என்பதுடன் அதன் தேறிய பெறுமதி செயற்படு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றமாக காசுப் பாய்ச்சற் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ஏஐ) ஊக்குவிப்பு கொடுப்பனவுகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட சேமிப்புக் கணக்கின் மீதி ரூ. 521,567 நிதிசார் நடவடிக்கைகளிலோ அல்லது முதலீட்டு நடவடிக்கைகளின் கீழோ பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.3 பொருத்தப்பாடற்ற நிர்வாகக் கணக்கு.

மீளாய்வாண்டில் மார்ச் மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரை தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்று காசுப் புத்தக மீதியுடன் பொருத்தப்பாடற்று காணப்பட்டது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைத்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதிசார் விளைவு ரூ. 18,004,593 மிகை காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டில் குறைவு ரூ. 613,396 ஆக காணப்பட்டமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதிசார் விளைவில் ரூ. 18,617,989 அதிகரிப்பொன்றினை காணக்கூடியதாக இருந்தது. மீளாய்வாண்டில் கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள கருத்திட்டமொன்றிற்காக பெற்ற மானியத்திற்குரிய காலக்கழிவு ரூ. 18,387,668 ஆண்டுக்குரிய இலாபத்தில் எழுதப்படாமை மேற்குறிப்பிட்ட மிகை அதிகரிப்புக்கு பிரதானமாக தாக்கம் செலுத்தியது.

3.2 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 ஜூன் மாதம் 02 ஆம் திகதிய பிஈடீ.12 இலக்கமுடைய அரச நிர்வாக சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்களையும் வருடாந்த வரைவு அறிக்கையினையும் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 2020 டிசம்பர் 21 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

டபிள்யூ. பி. சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி